**பொலிஸ் வெகுமதி நிதியம் - 2014**

**-------------------------------------------------------**

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் 74(4) ஆம் பிரிவுடன் (அத்தியாயம் 65) சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

**-----------------------------------------------------------------------------------------**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

**-----------------------------------------**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை

வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கும் குற்றப் பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ள முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 3,000 தொகையான முற்பணங்கள் 15 ஆண்டுகளிற்கும்

மேலாக நிலுவையாக காணப்பட்டன. அந்த முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,371,166 கூட்டுத்தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டன. இருப்பினும், இந்த மீதியினை அறவிடுவதற்கு 2015 மார்ச் 31 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2001 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 32,048,586 மொத்தமான விசேட வெகுமதிகள் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையால் மீளாய்வாண்டின் இறுதி வரை குறித்த உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிரூபத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 893,780,700 தொகையான மிகையினை விளைவித்திருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 993,687,966 ஆக இருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 99,907,266 ஆல் பின்னடைவொன்று காணப்பட்டது. இது பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | **2014** | **2013** | **நடப்பு ஆண்டின் நிதி விளைவுகளிற்கான தாக்கம் {சாதகம்/(பாதகம்)}** |
|---|---|---|---|
| **வருமானம்** | ரூபா | ரூபா | ரூபா |
| நீதிமன்ற தண்டப்பணங்கள் | 648,001,235 | 832,871,950 | (184,870,715) |
| மோட்டார் போக்குவரத்து தண்டப்பணங்கள் | 444,230,576 | 115,553,898 | 328,676,678 |
| பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு | 11,440,434 | 13,004,477 | (1,564,043) |
| முதலீடுகள் மீதான வருமானம் | 386,092,184 | 433,524,367 | (47,432,183) |

| | | | |
|---|---|---|---|
| ஏனைய வருமானம் | - | 35,899,700 | (35,899,700) |
| **மொத்த வருமானம்** | **1,489,764,429** | **1,430,854,392** | **58,910,037** |
| **கழிக்க: செலவினம்** | | | |
| வெகுமதிகள் மற்றும் களியாட்ட நடவடிக்கைகள் | (595,787,679) | (436,966,226) | (158,821,453) |
| நிர்வாகச் செலவினம் | (196,050) | (200,200) | 4,150 |
| | **893,780,700** | **993,687,966** | **(99,907,266)** |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**வெகுமதிகளின் கொடுப்பனவு**

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட வெகுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **2014** | | **2013** | | **2012** | |
|---|---|---|---|---|---|---|
| | **தொகை** | **ஆட்களின் எண்ணிக்கை** | **தொகை** | **ஆட்களின் எண்ணிக்கை** | **தொகை** | **ஆட்களின் எண்ணிக்கை** |
| | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | |
| (i) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கான வெகுமதிக் கொடுப்பனவு | 415.3 | சமர்ப்பிக்கப்படவில்லை | 422.7 | 275,076 | 585.2 | 396,287 |
| (ii) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கும் சிவில் நபர்களிற்கும் செலுத்திய விசேட | 1.8 | சமர்ப்பிக்கப்படவில்லை | 2.1 | 262 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் 18 சிவில் | 33.1 | 1,160 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் 72 சிவில் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெகுமதிகள் | | | | நபர்கள் | | நபர்கள் |
| (iii) பொலிஸ் உத்தியோகத்தர்களிற்குச் செலுத்திய மோட்டார் போக்குவரத்து வெகுமதிகள் | 163.1 | சமர்ப்பிக்கப்படவில்லை | - | - | - | - |

பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கும் சிவில் நபர்களிற்கும் மீளாய்வாண்டில் வெகுமதிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், வெகுமதிகள் செலுத்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வெகுமதிகளின் கணக்கீடு

(ஆ) வெகுமதிகள் கொடுப்பனவுக் கட்டுப்பாடு

(இ) நிலையான வைப்புக்களில் முதலீடு

(ஈ) பதிவேடுகளின் பேணுகை